Crl. Misc. 39

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF ADDITIONAL DISTRICT COURT, RAMANATHAPURAM**

| | | |
|---|---|---|
| Calendar .. .. | } | |
| Miscellaneous .. .. | } | |
| Preliminary Register .. .. | } | **S.C. 173/2025** |
| Sessions .. .. | } | |
| | } | Prosecution – **PW6** |
| Deposition of witness for | } | Defence – |
| | } | Court – |

| | | |
|---|---|---|
| Name | : | அகஸ்தஸ் |
| Father/Husband Name | : | ஜான் |
| Village | : | அக்காள்மடம், பாம்பன் |
| Taluk | : | இராமேஸ்வரம் |
| Calling | : | Flipkart ல் வேலை |
| Religion | : | |
| Age | : | 32 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 26.11.2025.

(எதிரி ஆஜர்.)

**முதன்மை விசாரணை:–**

நான் இராமேஸ்வரம் தாலுகா பாம்பன் அக்காள் மடத்தில் வசித்து வருகிறேன். Flipkart–ல் வேலை செய்து வருகிறேன். எதிரியை தெரியும். இறந்துபோன ஜோசப் கென்னடியை தெரியும். கென்னடியின் மனைவி மரியபாக்கியத்தை தெரியும். சாட்சிகள் சீமோன், பாஸ்கர், தேவ பெனிடிக் ஆகியோர்களை தெரியும். கடந்த 09.01.2025 ம் தேதி அன்று என் பெரியம்மா வனிதா என்பவரின் நினைவுநாள். வனிதா என்பவரின் நினைவுநாள் அக்காள்மடத்தில் உள்ள அவரது வீட்டில் நடந்தது. நான்

அந்த நிகழ்வுக்கு சென்றிருந்தேன். நான் சாப்பாடு வைப்பது, ஜாமான்களை வாங்க கடைக்குசெல்வது போன்ற வேலைகளை செய்து கொண்டிருந்தேன். இந்த சம்பவம் பற்றி தெரியாது. நான் இந்த சம்பவம் பற்றி எதுவும் கேள்விப்படவில்லை. கென்னடி இறந்தது தெரியும், எப்படி இறந்தார் என்று தெரியாது. போலிசார் என்னை விசாரித்தபோது இதற்கு முன்பு சொன்னதுபோல்தான் சொன்னேன்.

(இந்த சாட்சியை அரசு தரப்பில் பிறழ்சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.)

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u> –

போலிஸ் விசாரணையில் கடந்த 09.01.2025ம் தேதி இரவு 08.00 மணியளவில் அக்காள்மடம் பஸ்ஸ்டாப்பில் நான், சீமோன், எபிராஜ் ஆகியோர்கள் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தோம் என்றும், அப்போது அங்கு வந்த அக்காள்மடம் வடகரையை சேர்ந்த ஆஜர் எதிரி ரபேல்ரமேஷ் கென்னடியின் முதுகில் ஓங்கிமிதித்தார் என்றும், கென்னடி கீழே விழுந்ததும் அவர் இடுப்பில் வைத்திருந்த கத்தியை எடுத்து கென்னடி ரபேல்ரமேசின் இடதுபக்க நெற்றி, இடதுபக்ககாதில் கீறினார் என்றும், அப்போது எதிரி கென்னடியை கெட்ட வார்த்தையால் திட்டி கையில் மறைத்து வைத்திருந்த அருவாளால் கென்னடியின் கழுத்தில் வெட்ட போனார் என்றும், அப்போது கென்னடி ஒதுங்கியதால் வலதுபக்க அக்குள் பகுதியில் வெட்டுப்பட்டு சதை கிழிந்து கென்னடி கீழே விழுந்துவிட்டார் என்றும், உடனே நான், சீமோன், அகஸ்தஸ் மற்றும் இமானுவேல் சண்டையை விலக்கிவிட்டோம் என்றும், அப்போது அங்கிருந்த சீமோனிடம் இந்த சண்டை எதற்கு நடந்தது என்று கேட்டேன் என்றும், அப்போது சீமோன் அன்று மாலை 04.00 மணியளவில் பெனடிக்கின் அம்மா வனிதாவின் முதல் வருட நினைவு நாளில் சாமி கும்பிட ஆஜர் எதிரியும், இறந்துபோன கென்னடியும் சென்றார்கள் என்றும், அவர்கள் இருவரும் அந்த இடத்தில் மதுபோதையில் சண்டைபோட்டுக்கொண்டார்கள் என்றும், அந்த விரோதத்தை மனதில் வைத்துக்கொண்டு இந்த சம்பவம் நடந்தது என்றும் சொன்னார். காயம்பட்டு கிடந்த கென்னடியை அவரது வீட்டில் சீமோன் தகவல் சொன்னார் என்றும், உடனே கென்னடியின் மனைவி மற்றும் மகள் உடன் வந்து காயம்பட்டு கிடந்த கென்னடியை

108 ஆம்புலன்ஸ் மூலம் இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சேர்த்தார்கள் என்றும், இரவு 09.30 மணியளவில் இறந்துவிட்டார் என்றும், எதிரி எனக்கு சித்தப்பா முறை என்பதால் தற்போது எதிரியை இவ்வழக்கிலிருந்து காப்பாற்றும் நோக்கத்தில் உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை – இல்லை.

Sd/-சி.மோகன்ராம்,

கூடுதல் மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம்.

Crl. Misc. 39

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF ADDITIONAL DISTRICT COURT, RAMANATHAPURAM**

| | | | |
|---|---|---|---|
| Calendar .. .. | } | | |
| Miscellaneous .. .. | } | | |
| Preliminary Register .. .. | } | **S.C. 173/2025** | |
| Sessions .. .. | } | | |
| | } | Prosecution | – **PW5** |
| Deposition of witness for | } | Defence | – |
| | } | Court | – |

| | | |
|---|---|---|
| Name | : | எபிராஜ் |
| Father/Husband Name | : | சாமுவேல் |
| Village | : | அக்காள்மடம், பாம்பன் |
| Taluk | : | இராமேஸ்வரம் |
| Calling | : | மீன்பிடி தொழில் |
| Religion | : | |
| Age | : | 55 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 26.11.2025.

<u>(எதிரி ஆஜர்.)</u>

**முதன்மை விசாரணை:–**

நான் இராமேஸ்வரம் தாலுகா பாம்பன் அக்காள் மடத்தில் வசித்து வருகீறேன். மீன்பிடி தொழில் செய்து வருகிறேன். எதிரியை தெரியும். இறந்துபோன ஜோசப் கென்னடியை தெரியும். கென்னடியின் மனைவி மரியபாக்கியத்தை தெரியும். சாட்சிகள் சீமோன், பாஸ்கர், தேவ பெனிடிக் ஆகியோர்களை தெரியும். இறந்த கென்னடி எப்போது, எங்கு வைத்து இறந்தார் என்றால் தெரியாது. போலிசார் என்னை விசாரித்தார்கள். விசாரித்தபோது எனக்கு எதுவும் தெரியாது என்றுதான் சொன்னேன்.

(இந்த சாட்சியை அரசு தரப்பில் பிறழ்சாட்சியாக பாவித்து குறுக்கு

விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.)

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u> –

போலிஸ் விசாரணையில் கடந்த 09.01.2025ம் தேதி இரவு 08.00 மணியளவில் அக்காள்மடம் பஸ்ஸ்டாப்பில் நான், சீமோன், அகஸ்தஸ் ஆகியோர்கள் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தோம் என்றும், அப்போது அங்கு வந்த அக்காள்மடம் வடகரையை சேர்ந்த ஆஜர் எதிரி ரபேல்ரமேஷ் கென்னடியின் முதுகில் ஓங்கிமிதித்தார் என்றும், கென்னடி கீழே விழுந்ததும் அவர் இடுப்பில் வைத்திருந்த கத்தியை எடுத்து கென்னடி ரபேல்ரமேசின் இடதுபக்க நெற்றி, இடதுபக்ககாதில் கீறினார் என்றும், அப்போது எதிரி கென்னடியை கெட்ட வார்த்தையால் திட்டி கையில் மறைத்து வைத்திருந்த அருவாளால் கென்னடியின் கழுத்தில் வெட்ட போனார் என்றும், அப்போது கென்னடி ஒதுங்கியதால் வலதுபக்க அக்குள் பகுதியில் வெட்டுப்பட்டு சதை கிழிந்து கென்னடி கீழே விழுந்துவிட்டார் என்றும், உடனே நான், சீமோன், அகஸ்தஸ் மற்றும் இமானுவேல் சண்டையை விலக்கிவிட்டோம் என்றும், அப்போது அங்கிருந்த சீமோனிடம் இந்த சண்டை எதற்கு நடந்தது என்று கேட்டேன் என்றும், அப்போது சீமோன் அன்று மாலை 04.00 மணியளவில் பெனடிக்கின் அம்மா வனிதாவின் முதல் வருட நினைவு நாளில் சாமி கும்பிட ஆஜர் எதிரியும், இறந்துபோன கென்னடியும் சென்றார்கள் என்றும், அவர்கள் இருவரும் அந்த இடத்தில் மதுபோதையில் சண்டைபோட்டுக்கொண்டார்கள் என்றும், அந்த விரோதத்தை மனதில் வைத்துக்கொண்டு இந்த சம்பவம் நடந்தது என்றும் சொன்னார். காயம்பட்டு கிடந்த கென்னடியை அவரது வீட்டில் சீமோன் தகவல் சொன்னார் என்றும், உடனே கென்னடியின் மனைவி மற்றும் மகள்

உடன் வந்து காயம்பட்டு கிடந்த கென்னடியை 108 ஆம்புலன்ஸ் மூலம் இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சேர்த்தார்கள் என்றும், இரவு 09.30 மணியளவில் இறந்துவிட்டார் என்றும், எதிரி எனக்கு தம்பி முறை என்பதால் தற்போது எதிரியை இவ்வழக்கிலிருந்து காப்பாற்றும் நோக்கத்தில் உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை – இல்லை.

Sd/-சி.மோகன்ராம்,

கூடுதல் மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம்.

Crl. Misc. 39

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF ADDITIONAL DISTRICT COURT, RAMANATHAPURAM**

| | | | |
|---|---|---|---|
| Calendar | .. .. | } | |
| Miscellaneous | .. .. | } | |
| Preliminary Register | .. .. | } | **S.C. 173/2025** |
| Sessions | .. .. | } | |
| | | } | Prosecution – **PW4** |
| Deposition of witness for | | } | Defence – |
| | | } | Court – |

| | | |
|---|---|---|
| Name | : | தேவபெனிடிக் |
| Father/Husband Name | : | ஜான்சௌந்தர்ராசு |
| Village | : | அக்காள்மடம், பாம்பன் |
| Taluk | : | இராமேஸ்வரம் |
| Calling | : | மீன்பிடி தொழில் |
| Religion | : | |
| Age | : | 43 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 26.11.2025.

(எதிரி ஆஜர்.)

**முதன்மை விசாரணை:–**

நான் இராமேஸ்வரம் தாலுகா பாம்பன் அக்காள் மடத்தில் வசித்து வருகீறேன். மீன்பிடி தொழில் செய்து வருகிறேன். அசா.1 இளவேனில்சில்பா, அ.சா.2 மரியபாக்கியம், அசா.3 சீமோன் மற்றும் சாட்சி பாஸ்கரை தெரியும். எதிரியை தெரியும். இறந்துபோன ஜோசப் கென்னடியை தெரியும். எதிரிக்கும் இறந்துபோன ஜோசப் கென்னடிக்கும் சண்டை என்று கேள்விப்பட்டேன். 09.01.2025ம் தேதி அக்காள்மடம் பஸ்ஸ்டாப் அருகே எதிரியும், ஜோசப் கென்னடியும் சண்டை போட்டதாகவும் கேள்வி பட்டேன்.

அது சம்மந்தமாக அ.சா.1 இளவேனில் சில்பா புகார் கொடுத்ததாக கேள்விப்பட்டேன். மறுநாள் காலை 11.00 மணியளவில் ஊரில் எதிரியும், கென்னடியும் சண்டைபோட்டுக்கொண்டதாக கேள்விப்பட்டேன். போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

(இந்த சாட்சியை அரசு தரப்பில் பிறழ்சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.)

<u>**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**</u> –

போலிஸ் விசாரணையில் கடந்த 09.01.2025ம் தேதி என் அம்மா வனிதாவுக்கு முதலாமாண்டு நினைவுநாளுக்காக சாமி கும்பிட்டோம் என்றால் சரிதான். அந்த நிகழ்வுக்காக பாம்பனை சேர்ந்த ரபேல்ரமேஷ் மற்றும் கென்னடி மற்றும் உறவுக்காரர்கள் வந்திருந்தார்கள் என்றால் உறவினர்கள் வந்தார்கள், ரபேல்ரமேசும், கென்னடியும் வந்தார்களா என்றால் தெரியாது. எங்கள் வீட்டிற்கு வந்த இடத்தில் மது அருந்தியதால் எதிரிக்கும் கென்னடிக்கும் சண்டை நடந்தது என்றும், அந்த சண்டையை நான், சீமோன், பாஸ்கர் ஆகியோர்கள் விலக்கிவிட்டோம் என்றால் நான் விலக்கிவிடவில்லை, சண்டை நடந்ததா என்று எனக்கு தெரியாது. எதிரி எனக்கு சித்தப்பா என்பதால் தற்போது எதிரியை இவ்வழக்கிலிருந்து காப்பாற்றும் நோக்கத்தில் உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u> – இல்லை.

Sd/-சி.மோகன்ராம்,
கூடுதல் மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம்.